# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய (திருத்தச்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, செத்தெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 6.00 தபாற் செலவு : ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர் ஒய்வூதிய (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 66/2005

## 1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர் ஒய்வூதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர் ஒய்வூதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

432 ஆம் அத்தியாயத்தில் 5அ மற்றும் 5ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (432 ஆம் அத்தியாயமான) பாடசாலை ஆசிரியர் ஒய்வூதியச் சட்டம், அச்சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 5அ மற்றும் 5ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுவனவாதலும் வேண்டும் :-

"விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதிய நிதியத்தைத் தாபித்தல்.

5அ. (1) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்க (இதனகத்துப்பின்னர் "விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதிய நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதிய நிதியமொன்று கீழே தரப்பட்ட முறையிலே விதுரர்களுக்கும் மற்றும் பாடசாலை ஆசிரியைகளின் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியம்வழங்குவதற்கெனத் தாபிக்கப்படலாம் என்பதுடன் ஒழுங்குபடுத்தவும்படலாம்.

(2) விதுரர்கள் அனாதைகள் ஒய்வூதிய நிதியத்தைத் தாபித்தல், ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல், முகாமைசெய்தல் என்பவற்றிற்கும், விதுரர்களும் ஆசிரியைகளின் பிள்ளைகளும் எந்த நிபந்தனைகளுக்கமையவும்சூழ்நிலைகளிலும் அத்துடன் எந்த மட்டுப்பாடுகளுக்கு அமையவும் ஒய்வூதியம் வழங்கப்பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகின்றார்

களோ அந்த நிபந்தனைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும், அதற்கு அரசாங்கத்தினால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகைகள் எவையுமிருப்பின் அவற்றை நிர்ணயிப்பதற்கும், ஆசிரியைகளின் சம்பளங்களிலிருந்து அவர்களின் உதவுதொகைகளைக் கழிப்பதற்கு அதிகாரமளித்து பாடசாலை ஆசிரியைகளால் அதற்குச் செலுத்தப்படவேண்டிய உதவுதொகைகளை நிர்ணயிப்பதற்கும், அத்தகைய கழிப்பனவுகளைச் செய்வதற்கான நடவடிக்கைமுறையை விதித்துரைப்பதற்கும், அத்தகைய எல்லா உதவுதொகைகளையும் விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு அதிகாரமளிப்பதற்கும் மற்றும் சொல்லப்பட்ட நிதியத்திற்கு இடைநேர் விளைவான அல்லது அதனுடன் தொடர்புடைய எந்தக் கருமங்களுக்கு இச்சட்டத்தின் கீழ் வெளிப்படையான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லையோ அந்த எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்து இச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :

ஆயின், அமைச்சர் இயன்றவரை இப்பிரிவின் கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குகையில் 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் கீழ் அதே விடயங்கள் தொடர்பில் ஆக்கப்பட்டதை ஒத்த ஏற்பாட்டைச் செய்தல் வேண்டும்.

5அ என்னும் பிரிவு குறித்தசில பிரிவினருக்கு ஏற்புடைத்தாக மாட்டாது.

5ஆ. பிரிவு 5அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் -

(அ) 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதுரர்கள், அனாதைகள் ஒய்வூதிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியமொன்றின் கொடுப்பனவிற்குத் தகைமையுடைய பெண் பகிரங்க அலுவலர்களின் விதுரர்கள் மற்றும் அனாதைகள் ; அத்துடன்

(ஆ) 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சி சேவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சி சேவை விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின்கீழ் ஓய்வூதியமொன்றிற்கு தகைமையுடைய உள்ளூராட்சி சேவையின் பெண் உறுப்பினர்களின் விதுரர்கள் மற்றும் அனாதைகள்,

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஓய்வூதியத்தின் அளிப்பொன்றிற்கு உரித்துடையவர்களாதலாகாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது "ஓய்வூதிய திட்டத்தின் மற்றும் ஓய்வூதிய நிதியத்தின்" எனும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஓய்வூதிய திட்டத்தின், ஓய்வூதிய நிதியத்தின் மற்றும் விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின்".

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1983 ஒகத்து 1 ஆம் திகதியில் பயனுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

திருத்தங்களின் கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்